# உழவர் உலகம்

Volume: 17 | Issue: 03 | May 2026 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10



செழிப்பான காலத்திலும் வறட்சியான காலத்திலும்

# கனிகொடு!

# வாலிபர் உலகம்

வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் புதிய விழிப்புணர்வையும் மாற்றத்தையும் உருவாக்கும் இந்தப் பத்திரிகையை ஒவ்வொரு மாதமும் முழுமையாக வாசித்து, உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்க கொடுங்கள்.




₹100 ஆண்டு சந்தா

₹1000 ஆயுள் சந்தா

Account Detail

Scan Me

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

## உள்ளே!



98/500 to Ph.D



சிறிய தொடக்கம்; பெரிய மாற்றம்!



வேதாகம களஞ்சியம்

# தலைவாசல்

எனக்கன்பான வாசகர்களே! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.

நம் தேவனாகிய கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் அவருக்குக் கனி கொடுக்கிற ஒரு வாழ்க்கை வாழும்படிக்கு அழைக்கிறார். நீங்கள் கனி கொடுக்கவும், உங்கள் கனி நிலைத்திருக்கவும் வேண்டுமென்று விரும்புகிறார். உங்களுடைய சரீர வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நீங்கள், உங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் வளர்ச்சி இருக்கிறதா என்று அனுதினமும் சோதித்துப் பார்க்க வேண்டும். உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சி உங்கள் கனியுள்ள வாழ்வில் வெளிப்படும்.

கனிகள் குறைவதும், கனிகள் மறைவதும் ஆபத்தானது! வேதத்தில் கனி கொடுக்கத் தவறியவர்கள் தடுமாற்றத்தைக் கண்டு, பின்னர் வீழ்ச்சியின் விளிம்புக்குப் போய்விட்டார்கள். செழிப்பான நேரத்தில் கனி கொடுப்பதும், வறட்சியான காலத்தில் வாடிப் போவதும் வழக்கமாகிவிட்டது. ஆனால் வறட்சியான காலத்திலும், வாலிபனாகிய யோசேப்பு தவறாமல் கனிகொடுத்தான்.

உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் தொடர்ந்து தேவனுக்காகக் கனி கொடுக்க வேண்டும் என்றால், யோசேப்பு போல் ஒரு பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டும். பிரச்சனை மத்தியில் போராடி மேற்கொள்ளும் இருதயம், விசுவாசத்தில் உறுதியாய் நிற்பது, பரிசுத்தத்தை காத்துக்கொள்ள விலகி ஓடுவது போன்று நீங்கள் உங்களைக் காத்துக் கொள்ளும்போது, விடுதலை சாத்தியம்! பரிசுத்தம் சாத்தியம்! உயர்வும் மேன்மையும் நிச்சயம்!

எனவே யோசேப்பைப் போல்,

**நீங்கள் வசிக்கும் இடத்தில்,**

**வேலை பார்க்கும் இடத்தில்,**

**படிக்கும் இடத்தில்**

தொடர்ந்து தேவனுக்காகக் கனிக் கொடுத்துக் கொண்டே இருங்கள்!!

தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்!!



கிறிஸ்துவின் பணியில்

**மோகன் சி. லாசரஸ்**

சாட்சி: தொகுப்பு : காட்லின்




**இயேசுவை அறியாத குடும்பத்திலிருந்து இயேசுவை ஏற்றுக் கொண்டு, படிப்பில் 500க்கு 98 மதிப்பெண்கள் எடுத்துத் தோல்வியைச் சந்தித்த வாலிப சகோதரியை இன்றைக்கு டாக்டர் பட்டம் வாங்கச் செய்து, பச்சை மைப்பேனாவால் கையெழுத்து போட வேண்டும் என்ற ஆசையை ஆண்டவர் நிறைவேற்றியதைப் பற்றி Dr. கிருத்திகா சொல்லக் கேட்போமா?**

## உங்களது குடும்பம் மற்றும் சிறுபிராயம் பற்றிச் சொல்லுங்களேன்?

நான் திருச்சியில் இயேசுவை அறியாத குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். எனக்கு ஒரு அண்ணன், ஒரு தம்பி இருக்கிறார்கள். நான் சிறுமியாக இருந்தபோது எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த கிறிஸ்தவ குடும்பத்தார் **sunday class** எடுப்பார்கள். நான் 6ஆம் வகுப்பு படிக்கும்போது **sunday school**க்கு சென்று இயேசுவைப் பற்றி அறிந்து கொண்டேன். இயேசு என்ன கேட்டாலும் கொடுப்பார் என்ற வார்த்தை என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது. அதனால், இயேசுவை எனக்கு ரொம்ப பிடிக்கும். அதேநேரத்தில் என் அம்மாவும் அவர்களுக்குத் தெரிந்தவர்கள் மூலமாக இயேசுவை அறிந்து கொண்டார்கள். நாங்கள் வீட்டுக்குத் தெரியாமல் பைபிள் படிக்க ஆரம்பித்தோம். இதனால் என் அம்மா அப்பா பிரிந்து போகிற அளவுக்குப் பெரிய சண்டை வந்தது. நிறைய பாடுகளை சிறுவயதிலேயே சந்தித்தேன்.

## சிறுவயதிலேயே இயேசுவின் மீது நம்பிக்கை வைத்தீர்கள் சரி, உங்களுடைய படிப்பைப் பற்றிச் சொல்லுங்களேன்?

நான் 8ஆம் வகுப்புவரை எந்த வகுப்பிலும் தோல்வி அடையாமல் **average student**ஆக படித்து வந்தேன். 9ஆம் வகுப்பு படிக்கும்போது வேறு பள்ளிக்கு மாற்றப்பட்டேன். 9ஆம் வகுப்பு படிக்கும்போது இயேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு பெற்றோருக்குத் தெரியாமல் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டேன். அந்த நேரத்தில், **“ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்”** என்ற வசனத்தின் மூலமாக, தேவன் என்னோடு பேசினார். அதனால் 9ஆம் வகுப்பு







சுலபமாக வெற்றிபெற்று, 10ஆம் வகுப்பிற்கு போய் விடுவேன் என்று நினைத்திருந்தேன். ஆனால் நான் 9ஆம் வகுப்பு முழு ஆண்டு தேர்வில் 98/500 மார்க் மட்டுமே எடுத்து, எல்லா பாடத்திலும் தோல்வியுற்றேன். இதை என்னால் ஜீரணிக்கவே முடியவில்லை. 9ஆம் வகுப்பில் தோல்வியுற்றதால் எந்தப் பள்ளியிலும் தொடர்ந்து படிக்க அனுமதிக்கமாட்டார்கள். 5 பாடமும் **fail** ஆனதால் யாரும் எனக்கு உதவ முன்வரவில்லை. என்னுடன் படித்தவர்களும் என்னைப் புறக்கணித்தார்கள். அப்போது தான், ''ஆண்டவரே இதற்கு முன்பு 300 மதிப்பெண்கள் எடுத்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது உம்முடைய பிள்ளையாக மாறி, ஞானஸ்நானம் எடுத்தபிறகு என்னுடைய சூழ்நிலை இப்படி இருக்கிறதே' என்று மிகவும் அழுது புலம்பினேன். எதுவும் நடக்கவில்லை. மறுபடியும் 9ஆம் வகுப்பை அதே பள்ளியில் படித்தேன். இயேசப்பாவிடம், ''இன்றைக்கு நான் எல்லார் முன்பாகத் தலைகுனிந்து நிற்கிறேன், யாரெல்லாம் என்னைப் புறக்கணித்தார்களோ, அவர்கள் மத்தியில் என் தலையை உயர்த்த வேண்டும், இந்த உலகத்திலேயே என்ன மேற்படிப்பு இருக்கிறதோ, அதை நான் படிக்க வேண்டும், படித்து முடித்தபிறகு, நீங்கத் தான் என்னைப் படிக்க வைத்தீர்கள் என்று உங்க நாமத்தை நான் பிரஸ்தாபப்படுத்த வேண்டும்'' என்று ஆண்டவரிடம் சொல்லிவிட்டு (ஜெபிக்கவில்லை), என்னுடைய படிப்பை ஆரம்பித்தேன். 10ஆம் வகுப்பில் குறைந்த மதிப்பெண்கள் எடுத்து வெற்றிபெற்றேன். 11ஆம் வகுப்பில் என்ன குரூப் எடுக்க வேண்டும் என்று ஜெபித்தபோது, பள்ளி ஆசிரியர்கள் எனக்கு வழிகாட்டினார்கள். 11 மற்றும் 12ஆம் வகுப்பைக் குறைந்த மதிப்பெண்களுடன் படித்து முடித்தேன்.

**பள்ளிப் படிப்பை இவ்வளவு கஷ்டப்பட்டு படித்திருக்கிறீர்கள்... அப்படியானால், கல்லூரி படிப்பு இன்னும் கடினமாக இருந்ததா?**

கல்லூரியில் ஆங்கிலத்தில் படிக்க வேண்டும். பள்ளியில் தமிழ் மீடியம் படித்தபோதே கஷ்டப்பட்டு படித்தேன். எப்படியாவது படித்து என் பெயருக்குப் பின் ஒரு **Degree** இருக்க வேண்டும் என்று சொல்லிப் படிப்பைத் தொடர்ந்தேன். முதல் செமஸ்டரிலேயே **Arrear** வந்தது. அதைக்கண்டு துவண்டு போகாமல், அடுத்த செமஸ்டரில் எழுதித் தேர்ச்சி பெற்றேன். அதற்குப் பிறகு என் படிப்பில் தோல்வி என்பதே இல்லை. ஒவ்வொரு டிகிரியாகப் படிக்கத் தேவன் வாசலைத் திறந்து கொடுத்தார். ஒவ்வொரு டிகிரி படிக்கப் போகும்போதும், இதற்கு மேல் படிக்கக் கூடாது என்று நினைத்துதான் படித்தேன். ஆனால் இன்றைக்கு என் பெயருக்குப் பின்பு 8 டிகிரி இருக்கிறது என்றால், அது தேவாதி தேவனின் கிருபை மட்டுமே. இந்த 8 டிகிரி படிக்க என் நண்பர்கள் தான் **form** அனுப்பி எனக்குப் படிக்க வழிகாட்டினார்கள்.

யூனிவர்சிட்டியில் **PG** படிக்கும்போது கவர்னர் கையில் **Gold Medal** வாங்க உதவி செய்தார். இது யாரும் எதிர்பார்க்காத ஒன்று. **Ph.D.,** முடித்துக் கவர்னரிடம் **award** வாங்கினேன். ஒருமுறை வாங்க வேண்டும் என்று எதிர்பார்த்த எனக்கு ஆண்டவர் இரட்டிப்பான ஆசீர்வாதத்தைக் கொடுத்தார்.



**சூப்பர்... 10ஆம் வகுப்பை முடிக்க முடியுமா என்ற சூழ்நிலையில் இருந்த உங்களை இன்றைக்கு 8 டிகிரி முடிக்க வைத்திருக்கிறார்... சரி, Ph.D., படித்தே ஆக வேண்டும் என்று ஏன் நினைத்தீர்கள்?**

நான் 10ஆம் வகுப்புத் தேர்வுக்குப் பிறகு **typewriting class** போனேன். **Government** தேர்வு எழுத வேண்டுமானால் பச்சை கலர் மையினால் கையெழுத்து வாங்கி கொடுத்தால் தான் தேர்வு எழுத முடியும். எனவே அரசாங்கத்தில் பணிபுரியும் எனக்கு நன்றாகத் தெரிந்த ஒரு நபரிடம் கையெழுத்து வாங்க போனபோது, **original certificates** இருந்தால் தான் கையெழுத்து போடுவேன் என்று சொன்னார். எனக்கு உங்களை நன்றாகத் தெரியும், அதனால் எடுக்காமல் வந்தேன் என்று சொல்லியும், என்மேல் நம்பிக்கை இல்லாமல் கையெழுத்து போடவில்லை. அப்பொழுதுதான், ''எல்லோரும் பார்க்கும் வண்ணம் என் தலையை உயர்த்த வேண்டும்'' என்று ஜெபித்து விட்டு, பச்சை மையில் கையெழுத்து போட என்ன படிக்க வேண்டும் என்று விசாரித்தபோது, 'அரசாங்கத்தில் நல்ல ஒரு **posting**ல் இருக்க வேண்டும்' என்று சொன்னார்கள். இதற்காகவே **Ph.D.,** பண்ணினேன். கர்த்தர் என் ஆசையை நிறைவேற்றினார்.



**படிப்பில் zeroவாக இருந்த உங்களை, இன்றைக்கு 8 டிகிரி வாங்க வைத்த தேவனுக்காக நீங்கள் என்ன செய்கிறீர்கள்?**

நான் **Sunday class** மூலமாக இயேசுவை அறிந்து கொண்டதால், வாரந்தோறும் அநேக பிள்ளைகளுக்கு **Sunday school** எடுக்கிறேன். என்னுடைய சாட்சியின் மூலம் அநேகர் இயேசுவை ஏற்றுக் கொள்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், கிராமங்களுக்குள் சென்று, இயேசுவைப் பற்றி அறிவித்து வருகிறேன். நான் பெரிய படிப்பு படிக்க வேண்டும் என்று ஜெபிக்கவில்லை; என் மனதில் நினைத்ததையே செய்து கொடுத்த அவருக்காக ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும் என்று மருத்துவமனைகளில் சென்று ஊழியம் செய்து வருகிறேன். நான் தற்போது ஒரு கல்லூரியில் **Professor** ஆகவும் வேலை செய்து வருகிறேன். கல்லூரி முடிந்தவுடன் ஏதாவது ஒரு கிராமம், **park** என்று ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து சுவிசேஷம் அறிவித்து, அவர்களுக்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்து விட்டுத் தான் வீட்டுக்குப் போவேன். இப்பொழுது ஒரு குழுவோடு இணைந்து





எதைக் கேட்டாலும் அதை அவர் நிறைவேற்ற வல்லவராக இருக்கிறார். ஆகவே நீங்கள் இயேசுவிடம் என்ன சொல்லுகிறீர்கள் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். நான் 9ஆம் வகுப்பில் தோல்வியைக் கண்டு, உடைந்து அப்படியே உட்கார்ந்திருந்தேனானால், இன்றைக்கு என்னால் சாதித்திருக்கவே முடியாது. இன்றைக்கு நீங்களும் கூடத் தோல்வியைக் கண்டு சோர்ந்து போகாமல், ஆண்டவரை முன்வைத்துத் தொடர்ந்து பயணம் செய்தால் நீங்களும் ஒரு சாதனையாளராக மாறலாம்.

ஊழியம் செய்து வருகிறேன். என்னைக் குப்பையிலிருந்து உயர்த்தின தேவனுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று வாஞ்சையோடு செய்து வருகிறேன். நான் அவருக்காகச் செய்யும்போது அவர் என்னை மேலும் மேலும் உயர்த்திக் கொண்டே இருக்கிறார்.

**இன்றைக்கும் உங்களைப் போல் தோல்வியுடன் கலங்கி கொண்டிருக்கும் வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

கர்த்தருக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் எப்பொழுதும் உங்கள் இருதயத்தில் இருக்க வேண்டும். நாம் கர்த்தரிடம் ஆசையோடு

> அன்பான வாலிபர்களே,
> 9 ஆம் வகுப்பில்
> எல்லா பாடங்களிலும் failஆகி
> எல்லோராலும் புறக்கணிக்கப்பட்ட
> நிலையில் இருந்த
> சகோதரியை, 8 டிகிரி படிக்க வைத்து
> இன்றைக்கு Dr. கிருத்திகா என்ற
> பட்டத்தோடு உயர்த்தி வைக்கக்
> கர்த்தரால் முடியுமானால்,
> நீங்களும் Dr. கிருத்திகாவைப் போல
> ஒரு தீர்மானம் எடுத்துப் படிக்கும்போது,
> உங்களையும் நீங்கள் விரும்புகிறபடி
> இயேசு உயர்த்துவார்.






# தேவன் தேடும் எலியா

இஸ்ரவேல் தேசத்தில் ஆகாப் ராஜா ஆட்சி செய்த காலத்தில், அவரது மனைவி யேசபேல் மந்திரவாதம், விக்கிரக ஆராதனை மற்றும் இரத்த பலிகளால் தேசத்தை ஆவிக்குரிய இருளால் நிரப்பிவிட்டாள். அத்தகைய இருளான காலத்தில் தான் கர்த்தர், எந்த அடையாளமும் இல்லாத, பெரிய குடும்ப பின்னணி இல்லாத எலியா என்னும் தீர்க்கதரிசியை எழுப்பினார். அவர் மூலம் ஏற்பட்ட எழுப்புதலால் முழு தேசமும் கர்த்தரிடம் திரும்பியது. அதுவே உண்மையான எழுப்புதல்.

ஆனால் இன்று நம் தேசத்திற்கு ஒரே ஒரு எலியா போதாது. ஆகவே, எலியாவைப் போலவே வாலிபர்களாகிய உங்களையும் எழுப்பி பயன்படுத்த தேவன் விரும்புகிறார் (1 இராஜாக்கள் 17, 18, 19). கர்த்தர் எலியாவைப் பயன்படுத்தியதற்கு பல காரணங்கள் இருந்தாலும், இந்த பகுதியில் முக்கியமான 6 காரியங்களை பார்க்கலாம்.

## 1) தேவனுக்கு முன்பாக நின்ற எலியா

''என் வார்த்தையின்படி அன்றி இத்தேசத்தில் மழையாகிலும் பனியாகிலும் பெய்வதில்லை என்று 'இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன் நிற்கிற நான் சொல்கிறேன்'' என்று தேவனுடைய சமூகத்தில் நின்றபடி எலியா வைராக்கியமாக முழங்கினார்.

**யாத்திராகமம் 34:2-ல்**, கர்த்தர் மோசேயை அதிகாலையில் தம்முடைய சமூகத்திற்கு வரும்படி அழைத்தபோது, அவர் உடனே கீழ்ப்படிந்து மலையின் மேல் ஏறி கர்த்தருக்கு முன்பாக நின்றார்.



இன்று நீங்கள் சொல்ல முடியுமா?

''நான் தினமும் இயேசுவின் சமூகத்தில் நிற்கும் மனிதன் என்று?


அன்பான வாலிபர்களே, தினமும் அதிகாலையில் முதலில் தேவனுடைய சமூகத்தில் நிற்கும் அனுபவம் உங்களுக்கு இருக்க வேண்டும்.

## 2) தேவன் சொன்னதை செய்த எலியா

''ஆகாபிடம் போ'',

''கேரீத் ஆற்றண்டையில் ஒளிந்து கொள், அங்கே காகங்கள் மூலம் உன்னைப் போஷிப்பேன்'', ''சாரிபாத்திற்கு போ, விதவை மூலம் உன்னைப் போஷிப்பேன்'' என்று கர்த்தர் சொன்ன ஒவ்வொரு வார்த்தைக்கும் எலியா முழுமையாக கீழ்ப்படிந்தார். 3½ வருடங்களுக்குப் பிறகு, ''போய் ஆகாபுக்கு உன்னை காண்பி'' என்றபோதும் தயக்கமின்றி சென்றார். அவர் தேவன் பேசுவதை கேட்டதோடு மட்டும் இல்லாமல் அதன்படி நடந்தார்.

அதேபோல், நீங்களும் தேவன் பேசுவதைக் கேட்டு செயல்பட உங்களை அர்ப்பணிக்க வேண்டும்.



### 3) தேசத்திற்கான பாரம் கொண்ட எலியா

தன் தேசம் கர்த்தரை விட்டு விலகி விக்கிரக ஆராதனையிலும் மந்திரவாதத்திலும் விழுந்திருப்பதை பார்த்து, எலியாவின் இருதயம் உடைந்தது. அவர் தேவனுடைய சமூகத்தில் கதறி ஜெபித்தார். ஜனங்கள் மனந்திரும்ப வேண்டும் என்பதற்காக 3½ வருடங்கள் மழை வரக்கூடாது என்று ஜெபித்தார். அவர்கள் திரும்பியதும், வானம் திறக்கப்பட வேண்டுமென்று மீண்டும் ஜெபித்தார்.

அன்பான வாலிபனே, உன் தேசத்தில் பாவத்திலும் பல அடிமைத்தனங்களிலும் சிக்கியிருக்கும் மக்களைப் பற்றிய பாரம் உன் இருதயத்தை அழுத்த வேண்டும்.

### 4) கர்த்தருக்கான வைராக்கியம் கொண்ட எலியா

**“சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன்”** (1 இராஜா 19:14) என்று எலியா சொன்னார். கர்மேல் மலையில் அவர் தைரியமாக சவால் விட்டார்:

‘‘நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள்; நான் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன்; அப்பொழுது அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றான் (1 இராஜா 18:21-24)

இந்த தைரியம் அவருக்குள் இருந்த தேவனுக்கான பக்தி வைராக்கியத்தால் வந்தது.

அதே வைராக்கியம் இன்றைய வாலிபர்களாகிய உங்களுக்குள்ளும் இருக்க வேண்டும்.

### 5) பாடுகளுக்காக தன்னை ஒப்புக்கொடுத்த எலியா

என் வார்த்தையின்படி மழையும் பனியும் பெய்யாது என்று எலியா சொன்னவுடன், ஆகாபும் யேசபேலும் எலியாவை கொலை செய்யத் தேடினார்கள். அதனால் தேவன்,

‘‘கேரீத் ஆற்றண்டையில் ஒளிந்து கொள்’’ என்று வழிகாட்டினார். அங்கு தண்ணீர் வற்றிப் போனது. பசியும் தாகமும் உண்டானது. பிறகு,

‘‘சாரிபாத்திற்கு போ; அங்கு ஒரு விதவை மூலம் உன்னைப் போஷிப்பேன்’’ என்றார். தேசத்தின் பஞ்சத்திற்கு காரணம் எலியாதான் என்று ஆகாப் கோபத்துடன் எலியாவை கொல்ல வகைதேடினான். தொலைதூர பயணம், பசி, தாகம், ஆபத்து... இவையெல்லாம் இருந்தாலும் எலியா தேவனை விட்டுப் பின்வாங்கவில்லை.

அன்பான வாலிபர்களே, சிலுவையைச் சுமக்கும் வாழ்க்கைக்கும், பாடுகளும் நெருக்கங்களும் இருக்கும் வாழ்க்கைக்கும் நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

### 6) கருத்தாய் ஜெபித்த எலியா

எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான் (யாக்கோபு 5:17-18).

விதவையின் மகன் இறந்தபோது, ‘‘இந்த பிள்ளையின் ஆத்துமா திரும்ப வரட்டும்’’ என்று ஜெபித்தார். தேவன் ஜெபத்தை கேட்டார். மரித்த பிள்ளை உயிருடன் எழுந்தான் (1 இராஜா 17:20-22).

கர்மேல் மலையில் அக்கினிக்காக ஜெபித்தபோது, வானத்திலிருந்து அக்கினி இறங்கியது (1 இராஜா 18:36-38).

ஜெபிக்கிற மனிதரை தான் தேவன் பயன்படுத்த முடியும்.

நீங்களும் எலியாவைப் போல கருத்தாய் ஜெபிக்க உங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும்.


**அன்பான வாலிபர்களே! எலியாவைப் பயன்படுத்தின தேவன் உங்களையும் பயன்படுத்துவார்.**

**நீங்கள் ஜெபிக்கும்போது, உங்கள் ஜெபத்தை கனப்படுத்த, இயற்கைக்கு மேற்பட்ட அற்புதங்களை அவர் செய்வார்.**

### எலியாவைப் போல:

- தேவனுக்கு முன் நில்லுங்கள்
- அவர் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடுங்குங்கள்
- தேசத்திற்காக பாரம் கொள்ளுங்கள்
- தேவனுக்காக வைராக்கியமாக இருங்கள்
- பாடுகளை ஏற்றுக்கொள்ளுங்கள்
- கருத்தாய் ஜெபியுங்கள்

அப்பொழுது, தேவன் உங்களையும் இந்த தலைமுறைக்கான எலியாவாக எழுப்புவார்.



ஆலோசனை: அவி

Heart Beat



# Advocateஆ ஆசிரியரா!!

நான் பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு எழுதி இருக்கிறேன். வழக்கறிஞராக வேண்டும் என்பதே எனது ஆசை. ஆனால் என் பெற்றோர், வழக்கறிஞரானால் வெளியே போக வேண்டிய சூழ்நிலை வரும், வழக்கு விஷயமாக நெடுந்தூரம் பிரயாணம் பண்ண வேண்டியது வரும், இரவு நேரங்களில் தாமதம் ஆகும். எனவே, உனக்கு set ஆகாது, மேலும் பல கிரிமினல் வழக்குகள் **Deal** செய்யும்போது தேவையில்லாத பகை மற்றும் பலருடைய வன்மத்தை சம்பாதிக்க வேண்டிய கட்டாயம் வரும்; இது பொல்லாத உலகம், எனவே **Teacher Training Course B.Ed., M.Ed.,** படித்து ஆசிரியர் வேலை செய்வது நல்லது என்று சொல்கிறார்கள். ஆனால் எனக்கு அட்வகேட் படித்துச் சமுதாயத்திற்கு நல்ல சேவை செய்ய வேண்டும், நீதிக்காகக் குரல் கொடுக்க வேண்டும் என்பதே ஆசை. இப்பொழுது என்ன செய்வதென்று தெரியவில்லை. என் பெற்றோர் விருப்பப்படி ஆசிரியராக மாற வேண்டுமா? அல்லது என்னுடைய விருப்பப்படி வழக்கறிஞராக வேண்டுமா? குழப்பமாக இருக்கிறது. உதவி செய்யுங்கள்?

**– சுகன்யா, மதுரை.**

அன்பு சகோதரி சுகன்யா, நீங்கள் ஒரு சிறந்த வழக்கறிஞராகத் திகழ வேண்டும் என்பதே உங்களுடைய இலக்கு. மேலும் சமுதாயத்தில் ஏழை மக்களுக்கு உதவி செய்து நீதியை நிலைநாட்ட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் பெற்றோரின் எதிர்பார்ப்பும், பாசமும் உங்கள் இலக்குக்குத் தடையாக இருக்கின்றதே என்ற வருத்தமும் வேதனையும் நன்கு புரிகிறது.

சுகன்யா, உங்கள் பெற்றோர் சொல்லும் காரியத்திலும் சில உண்மை தன்மையும், நன்மையும் அடங்கியுள்ளது. இன்றைய காலகட்டத்தில் பெண் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு என்பது மிகவும் கஷ்டமாக உள்ளது. எனவே தான் உங்களுக்குப் பிடித்த, வழக்கறிஞர் துறை என்றாலும், பாதுகாப்பு கருதி அதை வேண்டாம் என்று சொல்லுகிறார்கள்.

சுகன்யா, உங்கள் பெற்றோர் உங்களை நேசித்து உங்களுக்கு அறிவுரை சொல்வது மிகச் சிறந்த ஒரு அணுகுமுறை. நீங்கள் ஒரு அட்வகேட் ஆகத் தொடர்ந்தால் என்ன **Pros & Cons,** ஆசிரியராக மாறினால் என்ன **Pros & Cons** என்பதை நீங்கள் ஒரு **Research** செய்து பார்க்கலாம்.






## Advocate

- பெண்களுடைய நீதிக்காகக் குரல் கொடுக்கலாம். இன்றைய சூழலில் பெண் பிள்ளைகளுக்குப் பல கொடுமைகள் நடக்கின்றன.
- பெண்களுடைய பிரச்சனைகளைப் புரிந்து கொண்டு, அவர்கள் சார்பில் குற்றங்களின் உண்மை தன்மையை விவாதித்து பேசலாம்.
- நீதித்துறை என்பது ஒரு மதிப்பிற்குரிய துறை. போதுமான வருமானத்தோடு வாழலாம்.
- பெண் வழக்கறிஞர்கள் மேலும் படித்து முன்னேறி நீதிபதி, **Legal Advisor Examination** எழுதி பின்னர் **Magistrate** கூட ஆகலாம்.





## ஆசிரியர்

- ஒரு சிறந்த ஆசிரியர் பல சிறந்த மாணவர்களை உருவாக்கும் சிற்பி. ஒரு கல்லுக்குள் சிற்பத்தைச் சிறந்த சிற்பியால் தான் பார்க்க முடியும்.
- மாணவர்களின் மனநிலையை ஒரு தாயைப்போல் புரிந்து கொண்டு, அவர்களை உற்சாகப்படுத்தி ஊக்குவிக்கலாம்.
- ஆசிரிய துறை என்பது அனைவராலும் போற்றப்படத்தக்க ஒரு சிறந்த துறை. சமுதாயத்தில் ஆசிரியர்களுக்கென்று ஒரு தனி மதிப்பே உண்டு.
- ஒரு ஆசிரியர் தேசத்திற்கு சிறந்த தலைவர்களையும் தன்னிகரில்லாத திறமை வாய்ந்த, தியாக செம்மல்களையும் உருவாக்க முடியும். (எ.கா) திரு.அப்துல்கலாம் போன்ற சிறந்த மனிதர்களை கொடுத்தது ஒரு ஆசிரியரே.





இப்படி இரண்டு துறையிலும் பல நன்மைகள் உண்டு. இதில் உங்களுக்கு விருப்பமான நீதித்துறை வேண்டுமென்றால், அதன் நன்மைகளை உங்கள் பெற்றோரிடம் அன்பாக எடுத்துச் சொல்லுங்கள். உங்களுடைய நலம் விரும்பும் பெற்றோர், உங்களுடைய விருப்பத்தையும் எதிர்காலத்தையும் புரிந்து கொண்டு மனம் மாற வாய்ப்பு உண்டு. அப்படியில்லையென்றால், ஆசிரியர் பணியின் மேன்மையை நீங்கள் உணர்ந்தால், அவர்களுக்கு கீழ்ப்படிந்து செயல்பட்டால் பெரிய நன்மையான காரியம் மற்றும் குடும்பத்தில் சமாதானமான வாழ்க்கையும் வாழலாம்.




சுகன்யா, இயேசு உங்களுக்கு ஒரு சிறந்த எதிர்காலத்தை வைத்திருக்கிறார். நீங்கள் இயேசப்பாவிடம், எனக்கு தீர்மானிக்க உதவி செய்யுங்கள் என்று உண்மையாக விண்ணப்பம் செய்தால், நிச்சயம் வழிநடத்துவார்.

**நான் உனக்கு போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்கு காட்டுவேன்;**
**உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்** (சங்கீதம் 32:8)

என்பதாக இயேசு சொல்கிறார். எனவே ஜெபித்து செயல்படுங்கள்!!



# கனிகொடு!

முகப்பு செய்தி: சதீஷ்

இன்றைய உலகத்தில் வாலிபர்கள் பல கனவுகளுடனும் உயர்ந்த இலட்சியங்களுடனும் வாழ்ந்து வருகிறார்கள். நல்ல கல்வி, உயர்ந்த வேலை, சமூகத்தில் மதிப்பு, புகழ், செல்வம் என இவையெல்லாம் அவர்களின் தேடலாக இருக்கிறது. ஆனால் ஒரு முக்கியமான கேள்வியை மட்டும் பலர் சிந்தித்து பார்ப்பதில்லை: "நான் தேவனுக்கு கனி கொடுக்கும் வாழ்க்கையை வாழ்கிறேனா?

கிறிஸ்தவ வாழ்க்கையின் உண்மையான முக்கியத்துவம் கனி கொடுப்பதில்தான் உள்ளது. நாம் இருக்கும் இடத்தில் தேவனுக்குப் பயனுள்ள கனி கொடுக்கும் வாழ்க்கை வாழ வேண்டும். அத்திமரம் கனி இல்லாமல் இலைகளால் செழித்து காணப்பட்டாலும், கனியில்லாத காரணத்தால் இயேசு அதைச் சபித்தார். வெளிப்புறமாக அது அழகாகவும் செழிப்பாகவும் இருந்தது. ஆனால் அது கனி தரவில்லை.

*அதேபோல், நமக்குள்:*

| திறமைகள் இருக்கலாம் | அழகு இருக்கலாம் | கல்வி இருக்கலாம் | செல்வம் இருக்கலாம் |
|---|---|---|---|

*ஆனால் கனி இல்லையெனில், அந்த வாழ்க்கை தேவனுக்குப் பயனற்றதாகிவிடும்*

## கனி தரும் வாழ்க்கையின் இரகசியம்

ஒரு தோட்டத்தில் பல செடிகள் இருந்தாலும், எந்தச் செடி நிலத்திலிருந்து அதிக சத்துக்களை உறிஞ்சுகிறதோ, அந்தச் செடி தான் செழித்து, வளர்ந்து கனி கொடுக்கும். அதேபோல், இயேசுவுக்கும் நமக்கும் உள்ள உறவு, திராட்சைச் செடிக்கும் கொடிக்கும் உள்ள உறவைப் போன்றது.



**"நானே திராட்சைச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்"** (யோவான் 15:5). திராட்சைச் செடியுடன் இணைந்திருக்கும் கொடி மட்டுமே கனி தர முடியும். செடியை விட்டுப் பிரிந்தால் அது உலர்ந்து போகும். அதுபோல, நீங்கள் இயேசுவோடு இணைந்திருக்கும்போது தான் கனி கொடுக்கும் வாழ்க்கை வாழ முடியும்.

கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும்போது: அவருடைய நற்குணங்களாகிய அன்பு, தாழ்மை, பரிசுத்தம், பொறுமை போன்றவை நமக்குள் வெளிப்படும்.

இல்லையெனில் மாம்சத்தின் குணங்களே வெளிப்படும்.

## கனி தரக் காலம் தேவை

‘‘கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனி கொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்’’ (யோவான் 15:4).

ஒரு விதை விதைக்கப்பட்ட உடனே கனி தராது. அது வளர, மழை, வெயில், காற்று, காலம் எல்லாவற்றையும் கடந்து வர வேண்டும். அதுபோல,

நாமும் கனி தர, இன்ப காலம், துன்ப காலம், சோதனை காலம், காத்திருக்கும் காலம் ஆகிய இவற்றைக் கடந்து வர வேண்டும்.

யோசேப்பு – எங்கு இருந்தாலும் கனி கொடுத்த மனிதன்

‘‘யோசேப்பு கனிதரும் செடி; அவன் நீர் ஊற்றண்டையில் உள்ள கனிதரும் செடி’ (ஆதி 49:22)

யோசேப்பின் வாழ்க்கையில், எதிர்ப்புகள் இருந்தது, துரோகம் இருந்தது, நெருக்கங்கள் இருந்தது, பொய் குற்றச்சாட்டுகள் இருந்தது, சிறை வாழ்க்கை இருந்தது; **ஆனால்** அவன் எங்கு இருந்தாலும் கனி கொடுத்தான்.

## ஏன் தெரியுமா?

- அவன் தன்னை பரிசுத்தமாகக் காத்துக் கொண்டான்.
- அந்தரங்க வாழ்க்கையை கறை படாமல் வைத்தான்.
- பாவ சூழ்நிலையில் இருந்தபோதும் பாவத்தை விட்டு ஓடினான்.
- சிறையிலிருந்தபோதும் கர்த்தரை விட்டுப் பிரிய வில்லை.
- முறுமுறுப்புக்கு இடம் கொடுக்கவில்லை.

அதனால், சிறைச்சாலையிலும் கூடத் தேவன் அவனைக் கனி கொடுக்கச் செய்தார்.

## பரிசுத்த வாழ்க்கை கனி தரச் செய்யும்

பரிசுத்த வாழ்க்கை தான் நம்மைத் தேவனுக்குக் கனி கொடுக்கும் மனிதர்களாக மாற்றுகிறது. கர்த்தரை எப்போதும் தன் முன்பாக வைத்துக் கொண்டு தன்னை சுத்தமாகக் காத்துக் கொள்கிறவனே கனி கொடுப்பான்.

அன்பான வாலிபர்களே, நீங்களும்:

- பாவ சூழ்நிலைகளை விட்டு விலகுங்கள்
- உங்கள் இருதயத்தை காத்துக் கொள்ளுங்கள்



- இயேசுவை விட்டுப் பின்வாங்காதீர்கள்
- அவருக்குள் நிலைத்திருங்கள்


அப்போது, யோசேப்பைப் போலக் கனி தரும் வாழ்க்கையை வாழ்வீர்கள்.

## சுத்திகரிப்பு – அதிக கனிக்காக

‘‘என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்’’ (யோவான் 15:2). யோசேப்பின் வாழ்க்கையில் வந்த கடினமான சூழ்நிலைகள், அவனை அழிக்க அல்ல, அவனை அதிக கனி தரச் செய்யத் தான். அந்தச் சோதனைகள்: அவனை உடைக்கவில்லை, அவனை உருவாக்கியது. அதேபோல், உங்கள் வாழ்க்கையில் வரும் சில கடினமான சூழ்நிலைகள் உங்களைத் தண்டிக்க அல்ல... உங்களை அதிக கனி கொடுக்கச் செய்யத் தேவன் அனுமதிக்கும் சுத்திகரிப்பு காலம்.

**எனக்கன்பான வாலிபர்களே, உங்கள் சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும், நீங்கள் கர்த்தரோடு இருந்தால் அவர் உங்களோடு இருப்பார். அவர் உங்களை ஒருபோதும் விட்டு விலகமாட்டார். நீங்கள் இந்த உலகில் எங்குச் சென்றாலும், யோசேப்பைப் போல: கனி கொடுக்கும், ஆசீர்வாத பாத்திரமாக மாற்றுவார். தேவனுக்குப் பயனுள்ள வாழ்க்கையை வாழ்வீர்கள்!**

# சேவையின் சிகரம்



மிஷனெரி பயணம் : ரூத்

## மிஷனெரி மார்க் டேனியல் பன்டேன்

மார்க் டேனியல் பன்டேன் (Mark Daniel Buntain) அவர்கள் 1923ஆம் ஆண்டு ஜனவரி 21 அன்று கனடா நாட்டின் வின்னிபெக் நகரில் பிறந்தார். மனிடோபாவில் உள்ள பெந்தெகோஸ்தே சபையில் பணியாற்றிய ஒரு போதகரின் மகனாகப் பிறந்த அவர், சிறுவயதிலிருந்தே ஆவிக்குரிய சூழலில் வளர்க்கப்பட்டார்.

மிஷனெரிகளின் வாழ்க்கைக் கதைகள் அவரை ஆழமாகத் தொட்டதால், தானும் ஒரு மிஷனெரியாக வேண்டும் என்ற வாஞ்சை அவரது இருதயத்தில் உருவானது. ஆரம்பத்தில் அவர் ஒரு வானொலி ஒளிபரப்பாளராகப் பணியாற்றினார். ஆனால் அந்த வேலையில் இருந்தபோதே கர்த்தரின் ஊழியத்திற்கான தெளிவான அழைப்பைப் பெற்றார்.

1942ஆம் ஆண்டு ஒரு நாள், வானொலி நிலையத்தில் பணியை முடித்துவிட்டு களைப்புடன் வீட்டிற்கு வந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது, தேவன் தன்னோடு பேசுவதை அவர் தெளிவாக உணர்ந்தார். அந்த அனுபவம் அவரது வாழ்க்கையை மாற்றியது. உடனே உலகப்பிரகாரமான வேலையை விட்டு, முழுநேர ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்தார்.



பின்னர் ஹுல்தா மன்ரோ (Huldah Munro) அவர்களைத் திருமணம் செய்தார். திருமணத்திற்குப் பிறகு அவர் தனது வேலையை ராஜினாமா செய்து, கனடாவின் சஸ்காட்சுவான் பகுதியில் ஒரு ஆலயத்தில் ஆயராகப் பணியாற்றினார். அதன் பின்பு தைவான், இலங்கை, பிலிப்பைன்ஸ், ஹாங்காங் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் மிஷனெரி சுவிசேஷகராகச் சேவை செய்தார்.

கர்த்தரின் அழைப்புக்குக் கீழ்ப்படிந்த இந்தத் தம்பதியினர், 1954 ஆம் ஆண்டு தங்களது ஒரு வயது மகளுடன் இந்தியாவின் கல்கத்தா நகரத்திற்கு வந்தனர். அங்கு எந்த வசதிகளும் இல்லாத நிலையில், ஒரு வெற்று இடத்தில் தாங்களே ஒரு கூடாரத்தை அமைத்து, இயேசு கிறிஸ்துவின் அன்பை மக்களிடம் அறிவிக்கத் தொடங்கினர்.

ஒரு நாள் மார்க் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது, ஒரு ஏழை மனிதர் கூடாரத்துக்குள் வந்து, "போதகரே, முதலில் எங்கள் வயிற்றுக்கு உணவளியுங்கள்; பிறகு பரலோக தேவனைப் பற்றிச் சொல்லுங்கள்" என்று கூறினார். இந்த வார்த்தைகள் மார்க்கின் இருதயத்தை ஆழமாகத் தொட்டது. சுவிசேஷத்துடன் சேர்ந்து சமூக சேவையும் அவசியம் என்பதை அவர் உணர்ந்தார். இதன் விளைவாக, 1964 ஆம் ஆண்டு "கல்கத்தா மெர்சி மிஷன்" (Calcutta Mercy Mission) என்ற அமைப்பைத் தொடங்கினார்.

## இந்த அமைப்பின் நோக்கம்:

- ஏழைகளுக்கு உணவு வழங்குதல்
- கல்வி வழங்குதல்
- மருத்துவ உதவி செய்தல்

1965 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான இலவச உணவுத் திட்டத்தை ஆரம்பித்து, 20,000-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு உதவி செய்தார். அதன் ஒரு பகுதியாக, ஏழை மாணவர்களின் வாழ்க்கையை மாற்றிய "அசெம்பிளிஸ் ஆஃப் காட சர்ச் பள்ளி" (Assemblies of God Church School) என்ற கல்வி நிறுவனத்தையும் நிறுவினார்.





மேலும், நோயாளிகளுக்கும் காயமடைந்தவர்களுக்கும் மருத்துவ சேவை வழங்க ஒரு சிறிய மருத்துவமனையைத் தொடங்கினார். காலப்போக்கில் அது பல சிறப்புத் துறைகள் கொண்ட (Multi-Speciality) பெரிய மருத்துவமனையாக வளர்ச்சி பெற்றது.

பல ஆண்டுகளாக அவர் கல்கத்தாவில் உள்ள "அசெம்பிளிஸ் ஆஃப் காட" சபையின் போதகராகப் பணியாற்றினார். அந்தச் சபை வட இந்தியாவில் 900-க்கும் மேற்பட்ட சபைகள் உருவாகக் காரணமான ஒரு ஆவிக்குரிய மையமாக விளங்கியது.

மேலும், அவர் சுவிசேஷச் செய்தியை இந்தி, ஆங்கிலம், பெங்காலி மொழிகளில் வானொலிமூலம் ஒளிபரப்பினார். இதன் மூலம் அநேகர் இயேசு கிறிஸ்துவை அறிந்து கொண்டார்கள். 1989ஆம் ஆண்டு மார்க் பன்டேன் உடல்நலக்குறைவால் மரணமடைந்தபோதிலும், அவரது மனைவி ஹுல்தா பன்டேன் இந்தியாவிலேயே தங்கி, அவர்கள் தொடங்கிய சேவைகளைத் தொடர்ந்து முன்னெடுத்தார். இன்றளவும் அந்த ஊழியத்தின் தாக்கம் பலரின் வாழ்க்கையில் காணப்படுகிறது.

அவர்கள் தொடங்கிய கல்கத்தா மெர்சி மிஷன், இன்று உலகெங்கிலும் 21 நாடுகளில் ஏழை மக்களுக்கு உதவி செய்து வருகிறது.

அவரது சிறப்பான சேவையைப் பாராட்டி, 1969ஆம் ஆண்டு அவருக்கு Betwhany Award (அமெரிக்கா) வழங்கப்பட்டது.



அன்பான வாலிபர்களே, ஒரு கண்டத்தை விட்டு இன்னொரு கண்டத்திற்கு வந்து, சேவை மனப்பான்மையுடன் ஊழியம் செய்த மார்க் பன்டேன் போல, நாமும் நம் சுற்றுப்புறத்தில் சிறிய சேவைகளின் மூலம் தேவனுடைய பணியைச் செய்ய முடியாதா?

## உதாரணமாக:

- பள்ளிக்குச் செல்ல முடியாத குழந்தைகளுக்கு உதவலாம்
- ஏழை மாணவர்களுக்குக் கல்வி ஆதரவு அளிக்கலாம்
- பசியால் தவிக்கும் மக்களுக்கு உணவு வழங்கலாம்
- நோயாளிகளுக்கு உதவலாம் பெரிய காரியங்கள் செய்ய முடியாவிட்டாலும், சிறிய அன்பு செயல்களே பெரிய மாற்றங்களை உருவாக்கும்.
- கர்த்தரின் அழைப்பை உணர்ந்து சேவை செய்ய முன்வாருங்கள்

அன்பை செயலால் காட்டுங்கள் அப்பொழுது, உங்கள் வாழ்க்கையும் தேவனுடைய ராஜ்யத்திற்கு பயனுள்ள வாழ்க்கையாக மாறும்.

CAREER GUIDANCE



# UPSC (IAS / IPS) தேர்வுக்குத் தயாராகும் முறைகள்

இந்தியாவின் மிக உயர்ந்த போட்டித் தேர்வுகளில் ஒன்றான UPSC தேர்வில் வெற்றி பெற சரியான திட்டமிடல், தொடர் முயற்சி மற்றும் தெளிவான தயாரிப்பு மிகவும் அவசியம்.

## தயாராக வேண்டிய முக்கிய வழிமுறைகள்

### பாடத்திட்டத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளுங்கள்

UPSC அறிவிப்பைக் கவனமாக வாசித்து, Prelims மற்றும் Mains தேர்வுகளின் முழு பாடத்திட்டத்தையும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். என்ன படிக்க வேண்டும் என்பது தெரிந்தால், தயாரிப்பு எளிதாகும்.

### அடிப்படை புத்தகங்கள் (NCERT) படிக்கவும்

6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்புவரை உள்ள NCERT சமூக அறிவியல் புத்தகங்கள் (வரலாறு, புவியியல், அரசியல், அறிவியல், பொருளாதாரம்) அடிப்படை அறிவை வலுப்படுத்த மிகவும் உதவும்.

### தினசரி செய்தித்தாள் வாசிக்கும் பழக்கம்

'The Hindu' அல்லது 'Indian Express' போன்ற தரமான ஆங்கில நாளிதழ்களைத் தினமும் வாசித்து: நடப்பு நிகழ்வுகள், அரசுத் திட்டங்கள், சர்வதேச செய்திகள், பொருளாதார மாற்றங்கள் போன்றவற்றை குறிப்பெடுக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

### விருப்பப் பாடத்தை சரியாகத் தேர்வு செய்யுங்கள்

**Mains** தேர்வுக்கு ஒரு **Optional Subject** தேர்வு செய்ய வேண்டும். உங்கள் ஆர்வம், படித்த துறை, மற்றும் மதிப்பெண் பெறும் வாய்ப்பு ஆகியவற்றைப் பார்த்துப் புத்திசாலித்தனமாகத் தேர்வு செய்யுங்கள்.

### தொடர்ந்து பயிற்சி மேற்கொள்ளுங்கள்

முந்தைய ஆண்டுகளின் வினாத்தாள்களை (Previous Year Question Papers) தீர்த்துப் பார்க்கவும். Mock Tests எழுதுவதன் மூலம், நேர மேலாண்மை, கேள்வி புரிதல் திறன், துல்லியமான பதில் எழுதும் திறன் இவற்றை மேம்படுத்த முடியும்.

### விடை எழுதும் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்

Mains தேர்வில் வெற்றி பெற Answer Writing Practice மிகவும் முக்கியம். தினசரி ஒரு கேள்விக்கு structured answer எழுதுங்கள், குறைந்த வார்த்தைகளில் தெளிவாக எழுதப் பழகுங்கள், Introduction – Body – Conclusion முறையைப் பின்பற்றுங்கள்.

### நேர்மறை மனப்பான்மை மற்றும் தொடர்ச்சி

**UPSC** என்பது ஒரு **marathon** போன்ற தேர்வு. அதற்கு விடாமுயற்சி, தன்னொழுக்கம், பொறுமை, தொடர்ச்சியான படிப்பு மிகவும் அவசியம்.

## தேவையான தகுதிகள்

**கல்வித் தகுதி:** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஒரு இளங்கலை பட்டம் (Any Bachelor Degree).

**வயது வரம்பு:**
- பொதுப்பிரிவு: 21 – 32 வயது
- OBC / SC / ST மற்றும் பிற பிரிவினருக்கு அரசு விதிகளின்படி வயது தளர்வு உண்டு.



## ஒரு சிறந்த தினசரி படிப்புத் திட்டம் (Daily Study Routine)

**காலை (5.30 – 8.00):**
- செய்தித்தாள் வாசிப்பு
- Current Affairs குறிப்பெடுத்தல்
- முக்கிய ஆசிரியர் கட்டுரைகள் (Editorials) வாசித்தல்

**பகல் (10.00 – 1.00):**
- Core Subjects (Polity/ History/ Geography / Economy)
- NCERT அல்லது Standard books படித்தல்

**மாலை (3.00 – 6.00):**
- Optional Subject preparation
- Previous year questions practice

**இரவு (7.30 – 10.00):**
- அன்று படித்தவற்றை Revision
- Answer writing practice
- Short notes தயாரித்தல்

தொடர்ச்சியாக முயற்சி செய்கிறவர்கள் மட்டுமே UPSC போன்ற பெரிய இலக்குகளை அடைகிறார்கள்.

பதிர் : ஞானலி

# வேதாகம புதையல் வேட்டை

## இடமிருந்து வலம்

2) பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசியும், ஒரே பெண் நியாயாதிபதியுமானவள்

5) கூடார ஆணியால் தைரியமாக எதிரியைக் கொன்றவள்

11) விருந்து பண்ணி எதிரியைக் காட்டிக்கொடுத்த ராணியின் மறுபெயர்

## வலமிருந்து இடம்

8) தன் முதிர்வயதில் குழந்தை பிறக்குமோ என்று நகைத்தவள்

12) கூச்ச பார்வையும் அற்பமாய் எண்ணப்பட்டவளுமானவள் இவள்

13) தன் நாச்சியாரின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து குமாரனை பெற்றுக்கொடுத்த எகிப்து தேச அடிமைப் பெண்

## கீழிருந்து மேல்

3) தன் சகோதரனை முறுமுறுத்ததினிமித்தம் வெண்குஷ்டமடைந்தவள்

4) எலிமெலேக்கின் மனைவி இவள்

7) தன் கணவனைக் கொல்லப்பார்த்த, தன் தகப்பனிடமிருந்து காப்பாற்றியவள்

9) தாவீது இரத்தம் சிந்தி பழிவாங்காதபடி தீவிரித்து வந்து ஆலோசனை கூறியவள்

10) தாவீதின் கொள்ளுப்பாட்டி இவள்

## மேலிருந்து கீழ்

1) ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்

6) தன் தகப்பனின் சுரூபங்களை திருடியவள் இவள்

14) வேதாகமத்தில் முதல் இரட்டை குழந்தையை பெற்றெடுத்தவள்

15) தன் மாமனாரோடு வேசித்தனம் பண்ணினாலும் நீதியுள்ளவள் என்று அழைக்கப்பட்டவள்






கடந்த மாத வெற்றியாளர்
ஆரோக்கிய கிறிஸ்டி, நெல்லை
அவர்களை வாழ்த்துகிறோம்.

BIBLE Treasure Hunt

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் **15.05.2026**

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

## கடந்த மாத விடைகள்

1. ஆதாம் ஏவாள்
2. சிம்சோன்
3. யோனா
4. அன்னாள்
5. தாவீது
6. எலியா
7. இயேசு
8. ஈசாக்கு
9. கெட்ட குமாரன்
10. பேதுரு
11. நோவா
12. மோசே
13. எஸ்தர்
14. தானியேல்
15. ஏசா
16. நெகேமியா
17. லாசரு
18. யோசேப்பு
19. பவுல்
20. சாமுவேல்

சரியான விடைஅனுப்பும் ஒரு நபருக்கு பரிசு உண்டு

சிந்திக்க : ரூத்

# கனிகொடுத்தவர்கள்...




## தீமோத்தேயு

தீமோத்தேயு, அப்போஸ்தலனான பவுலால் "அன்பான மகன்" என்று கருதப்பட்டு, விசுவாசத்தில் பயிற்றுவிக்கப்பட்டார். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலும், சபைகளை ஸ்திரப்படுத்துவதிலும் பவுலுடன் இணைந்து அர்ப்பணிப்புடன் உழைத்தார். அவரது விசுவாசமும் தியாக மனப்பான்மையும் மற்ற விசுவாசிகளுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக அமைந்தது. கிறிஸ்துவுக்காக புதிய ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதிலும் அவர் கனி நிறைந்த ஊழியம் செய்தார் (I தீமோத்தேயு 1:2).

### தாய் ஐனிக்கேயாளின் பங்கு

தீமோத்தேயுவை சிறுவயதிலிருந்தே வேத அறிவில் வளர்த்தவர் அவரது தாய் ஐனிக்கேயாள். விசுவாசமுள்ள யூத ஸ்திரீயான இவர், இயேசு கிறிஸ்துவை தன் இரட்சகராக ஏற்றுக்கொண்டார். தன்னுள்ளும், தனது தாய் லோவிசாளுக்குள்ளும் இருந்த உண்மையான விசுவாசம், தனது மகனான தீமோத்தேயுவிலும் வெளிப்பட காரணமாக இருந்தார். அவரது ஆவிக்குரிய வளர்ச்சிக்கான வலுவான அடித்தளமே, பவுலுடன் இணைந்து கனிகொடுக்கும் ஊழியம் செய்ய தீமோத்தேயுவை உருவாக்கியது (2 தீமோத்தேயு 1:1—5).

## சாமுவேல்



சவுலைப் போலல்லாமல், சாமுவேல் தேவனுடைய கட்டளைகளுக்கு முழுமையாக கீழ்ப்படியும் வாழ்க்கையை வாழ்ந்தார் (I சாமுவேல் 15:22). இஸ்ரவேல் ஜனங்கள் பாவத்தில் விழாதபடி அவர்களுக்காக இடைவிடாமல் ஜெபித்தார். அவரது ஜெபத்தின் பலனாக இஸ்ரவேல் பெலிஸ்தியர்மேல் வெற்றி பெற்றது.

தன் வாழ்நாள் முழுவதும் லஞ்சமின்றி, ஊழலின்றி நீதியை நிலைநாட்டி, தன் கைகளை சுத்தமாக வைத்திருந்தார். தேவன் கூறிய வார்த்தைகளை மறைக்காமல் மக்களுக்கு உண்மையாய் அறிவித்தார். சிறுவயதிலிருந்து முதுமை வரை தேவனுக்கெனத் தன்னை அர்ப்பணித்து, இஸ்ரவேலை வழிநடத்தியவர் சாமுவேல்.

### தாய் அன்னாளின் பங்கு

ஒவ்வொருவரும் தங்கள் இஷ்டப்படி நடந்துகொண்டிருந்த அந்தக் காலத்தில், ஆலயத்தில் கூட ஆசாரியர்கள் தவறாக நடக்கிறார்கள் என்பதை அறிந்து மனவேதனை அடைந்தார் அன்னாள். மலடியாக இருந்தாலும், உறுதியான விசுவாசத்தோடு கர்த்தரின் சேவைக்கென ஒரு ஆண்பிள்ளையை வேண்டிக் கொண்டு பெற்றார்.

சாமுவேலை சிறுவயதிலேயே தேவ ஆலயத்தில் ஒப்புக்கொடுத்து, தேவனுக்கும் மனுஷருக்கும் பிரியமான வாழ்க்கை வாழும் சூழலை உருவாக்கினார். தன் மகனை தேவனுக்காக அர்ப்பணித்த தியாக உள்ளம், சாமுவேலின் ஆத்தும வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது (I சாமுவேல் அதிகாரங்கள் 1 & 2).

# கனியை இழந்தவர்கள்...



## சிம்சோன்

இஸ்ரவேலை பெலிஸ்தியரிடமிருந்து விடுவிக்கும் பெரிய பொறுப்பு கொடுக்கப்பட்டிருந்தும், சிம்சோன் அதைத் தன் சுய விருப்பங்களுக்காக வீணடித்தார். இதன் மூலம் தன்னைப் பிரித்தெடுத்த நசரேய வாழ்வை மாசுபடுத்தினார்.

திம்னா ஊர்பெண்ணின் மீதான ஆசையிலிருந்து தெலீலாளுடனான உறவுவரை, தனது உணர்ச்சிகளுக்கே அடிமையாகி, தேவனுடைய நோக்கத்தை மறந்தார். "நான் எவ்வளவு தவறு செய்தாலும் கர்த்தர் என்னை விட்டு போகமாட்டார்" என்ற தவறான நம்பிக்கையால், கர்த்தருடைய ஆவியை இழந்ததை உணராமலேயே சத்துருக்களுக்கு முன் பலவீனமாய் நின்றார் (நியாயாதிபதிகள் 14 & 15).

### சிம்சோனின் தாயின் பங்கு

சிம்சோனின் பிறப்பைப் பற்றிய தேவதூதனின் முன்னறிவிப்பைப் பெற்றவர் அவரது தாய். சிம்சோன் கர்ப்பத்தில் இருந்த காலத்திலிருந்தே பரிசுத்தமாக வாழும்படி கட்டளையிடப்பட்டதால், அவரை நசரேயனாக வளர்த்தார்.


தன் கணவர் மனோவாவை விட அதிக ஆன்மீக விவேகத்துடன், தங்களைச் சந்தித்தவர் சாதாரண மனிதர் அல்ல, தேவதூதன் என்பதை உணர்ந்தார். தன் அழைப்பை உணர்ந்து, பெலிஸ்தியருக்கு எதிராக இஸ்ரவேலை விடுவிக்கும் தலைவனாக சிம்சோன் உருவாக வழிநடத்தினார் (நியாயாதிபதிகள் 13).

## மீகா

இஸ்ரவேலும் யூதாவிலும் காணப்பட்ட அநீதி, விக்கிரக ஆராதனை மற்றும் ஏழைகள் மீது நடந்த ஒடுக்குமுறைகள் காரணமாக, தேவன் அசீரியரும் பாபிலோனியரும் மூலம் தண்டனை கொண்டு வருவார் என்று எச்சரித்தார்.

மேலும், இயேசு பெத்லகேமில் பிறப்பார் என்றும், சிதறியிருந்த தேவ ஜனங்களை மீண்டும் ஒன்றுசேர்ப்பார் என்றும் தீர்க்கதரிசனம் கூறினார் (மீகா 5:2).

"நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நட" (மீகா 6:8) என்று போதித்தார். ஏழைகளைச் சுரண்டும் தலைவர்கள், பொய்தீர்க்கதரிசிகள் மற்றும் விக்கிரக ஆராதனை செய்பவர்களுக்கு எதிராக கடுமையான எச்சரிக்கைகளை வழங்கினார்.



### மீகாவின் தாய்

மீகா தனது தாயிடமிருந்து 1100 வெள்ளிக்காசுகளைத் திருடி, பின்னர் பயந்து அதைத் திருப்பிக் கொடுத்தான். ஆனால், அவனது தாய் அந்தப் பணத்தில் செதுக்கப்பட்ட விக்கிரகமும் வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகமும் செய்து, அவற்றை மீகாவின் வீட்டில் வைத்தார்.

மீகா தன் வீட்டிலேயே ஒரு ஆலயத்தை அமைத்து உருவ வழிபாடு செய்தான். தன் மகனை கண்டிக்க வேண்டிய இடத்தில், அவர் செய்த தவறை சுட்டிக்காட்டாமல், மாறாக கர்த்தரின் கட்டளைக்கு விரோதமான செயலை "கர்த்தருக்காக செய்தோம்" என்று நியாயப்படுத்தினார்.

இது, தேவனுடைய சித்தத்திலிருந்து மக்கள் எவ்வளவு தூரம் விலகிப் போயிருந்தார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது (நியாயாதிபதிகள் 17).

# சிறிய தொடக்கம்; பெரிய மாற்றம்!

சாதனை சுமா கிரஷன்



அன்பான இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

நம்முடைய வாழ்வில் நாம் எடுக்கும் சிறிய முயற்சிகளே சில நேரங்களில் பெரிய வெற்றிக்கு வழி வகுக்கும். இப்படி சிறிய முயற்சி செய்து உலகம் முழுவதும் தன்னுடைய வெற்றியை நிலைநாட்டின சாதனைப் பெண்ணின் வாழ்க்கை பயணம் இதோ உங்களுக்காக...



**Anita Roddick** (அனிதா ரொடிக்) **United Kingdom**ல் பிறந்தார். அனிதா சிறுவயதிலிருந்தே சமூகப் பிரச்சனைகள், மனித உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். படிப்பை முடித்தபிறகு சில காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். அனிதா ஆசிரியராகப் பணியாற்றியபோது அநேக நாடுகளுக்குப் பயணம் செய்து, அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறைகளையும் இயற்கைப் பொருட்களின் பயன்பாட்டையும் கற்றுக்கொண்டு, 1976 ஆம் ஆண்டு **Brighton** நகரத்தில் சிறியதாக **The Body Shop** என்ற கடையை நிறுவினார். தொடக்கத்தில் குறைவான லாபத்தை மட்டுமே இவரால் ஈட்ட முடிந்தது. ஆனால் அதைப் பற்றிக் கவலை கொள்ளாமல், இயற்கை பொருட்களை மட்டுமே பயன்படுத்தி பொருட்களைத் தயாரிக்க ஆரம்பித்தார்.

அது மட்டுமல்லாமல், விலங்குகளில் அழகு சாதனப் பொருட்களைப் பரிசோதிப்பதை எதிர்த்தார். இதில் இவர் இறுதிவரை உறுதியுடன் இருந்தார். இந்தப் புதிய சிந்தனை மற்றும் சிறிய முயற்சியின் விளைவாக, **The Body Shop** நிறுவனம் உலகம் முழுவதும் பல கிளைகளாக விரிவடைந்தது. அனிதா தொழில் வளர்ச்சியுடன் சமூக நலத்திற்கும் அதிக முக்கியத்துவம் அளித்தார். நியாயமான வர்த்தகம் **(Fair Trade)** போன்ற விஷயங்களில் ஆதரவாகக் குரல் கொடுத்தார். இன்று நாம் எல்லோருக்கும் முன்பாக மிகப்பெரிய உதாரணமாக வாழ்ந்து காட்டியுள்ளார்; அநேக விருதுகளையும் பெற்றுள்ளார்.

**இதை வாசிக்கும் வாலிபர்களே, நாம் எடுக்கும் சிறிய முயற்சியில் நாம் உறுதியாக இருக்கும்போது கண்டிப்பாக நாம் எதிர்பார்த்த எல்லையை நிச்சயம் அடைய முடியும். நாம் செய்ய வேண்டியது ஒன்றுதான்... "Take a small step to build a big tower."**

# அன்னையர் தினம்



அன்னையர் தினம் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் மிக முக்கியமான நாளாகும். இந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடி, நம் அன்பையும் மரியாதையையும் நன்றியையும் காட்டம் வெளிப்படுத்த வேண்டும். அம்மா என்பவர் உங்கள் அன்பு, கவனம் மற்றும் மதிப்பிற்கு தகுதியானவர். உங்கள் அம்மாவின் விருப்பத்தைப் பொறுத்து, இந்த நாளைப் பல விதமாகக் கொண்டாடலாம். அவற்றில் சில:

## பரிசுகள்:

கைவினைப் பரிசுகள் (Handmade cards), பூக்கள், புத்தகங்கள், நகைகள், அணிகலன்கள், ஆடைகள், கைப்பைகள் அல்லது அவர்களுக்குப் பிடித்த பொருட்களைப் பரிசாக வழங்கலாம். உங்கள் அம்மாவின் விருப்பத்தை அறிந்து, அவர் விரும்பும் பரிசை வாங்கி கொடுத்தால் அது அவர்களுக்கு மேலும் மகிழ்ச்சி தரும்.

## நேரம் செலவிடுதல்:

அம்மாவுடன் சேர்ந்து பழைய புகைப்படங்களைப் பார்க்கலாம் அல்லது சிறிய நடைபயணம் செல்லலாம். அவர்களுக்குப் பிடித்த இடத்திற்கு அழைத்துச் செல்லலாம் அல்லது அவர்கள் நண்பர்கள், உறவினர்களுடன் நேரம் செலவிட ஊக்குவிக்கலாம்.

## அன்பை வெளிப்படுத்துங்கள்:

“நன்றி அம்மா” அல்லது “அம்மா, நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன்” என்று ஒரு சிறிய குறிப்பு அல்லது கடிதம் எழுதி உங்கள் அன்பை வெளிப்படுத்துங்கள்.



## சமையல்:

அம்மாவுக்குப் பிடித்த உணவை நீங்கள் சமைத்து அவர்களுக்கு வழங்கலாம். வருடம் முழுவதும் அவர்கள் நமக்காகச் சமைக்கிறார்கள். குறைந்தது இந்த ஒருநாள் அவர்களுக்கு ஓய்வு கொடுக்கலாமே.

## உதவி:

வீட்டைச் சுத்தம் செய்வது, துணி துவைப்பது போன்ற வேலைகளை நீங்கள் செய்து, அம்மாவுக்கு ஓய்வு அளிக்கலாம். அவர்கள் நீண்ட நாட்களாகச் செய்ய விரும்பியிருந்த சிறிய ஆசைகளை நிறைவேற்ற உதவலாம்.

அம்மாவுக்கு மகிழ்ச்சி தரும்
ஏதாவது ஒரு செயலைச் செய்து,
இந்த நாளை நினைவாகக்
கொண்டாடுங்கள்.

HAPPY
Mother's Day



தகவல் : ஜோயல்

# Soul DETOX

**Hello Friends! மீண்டும் Soul Detox என்ற பகுதியின் மூலமாக உங்களைச் சந்திக்கிறதுல சந்தோஷம்! Social Media Detox செய்து பார்த்துப் பயன் அடைந்திருப்பீங்கன்னு விசுவாசிக்கிறோம்.**

**இந்தக் கடைசி காலத்தில் இளம் வாலிபர்கள் சந்திக்கிற ஒரு முக்கியமான யுத்தம் தான், எதிர்மறையான பேச்சு (Negative self-talk) இது எப்படி நம் ஆத்துமாவை நச்சுப்படுத்துகிறது என்பதையும், எவ்வாறு இதை மேற்கொள்ளலாம் என்பதையும் இந்த மாதம் பேசுவோமா?**

## பாதிப்புகள்:

''எனக்கு இது வராது'', ''இந்தக் காரியத்தைச் செய்ய எனக்குத் தகுதி இல்லை'', ''நான் நினைப்பதோ, விரும்புவதோ எனக்கு நடக்காது, கிடைக்காது'' இப்படி 20 முறை நாம் சொல்லிக்கொண்டே இருந்தாலோ, பிறர் நம்மைச் சொன்னாலோ, அதை உண்மை என்று நம் மூளை நம்பத் துவங்கிவிடுமாம்.

1. இது மன அழுத்தத்தை அதிகரிக்கப் பண்ணும்.

2. வாழ்க்கையின் நோக்கத்தை மறந்துபோகப்பண்ணும்

3. படிப்பில், வேலையில் அல்லது குடும்ப உறவுகளுக்குள் நம் ஈடுபாட்டைக் குறைக்கும்.

4. ஒரு சூழ்நிலையிலோ அல்லது ஒரு சம்பவத்திலோ உள்ள நல்ல கருத்துக்களை புறம் தள்ளித் தவறான கருத்துக்களை மட்டும் மனதில் ஆழமாகப் பதிய வைக்கும். இதை உளவியலாளர்கள், **Mental Filtering** என்று கூறுவார்கள்.

## மேற்கொள்ளும் வழிமுறைகள்:

தாவீது ஆயீ பட்டணத்தாரால் கொள்ளையிடப்பட்டு, தன் சொந்த ஜனங்களால் கைவிடப்பட்டு கல்லெறியப்பட்டு நின்றபோது, **"தாவீது கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்திக்கொண்டார்" (I சாமு. 30:6)** இதைப் பார்த்து ஆண்டவர், ஆயீ பட்டணத்தாரை ஜெயிக்க தாவீதுக்கு யுக்தியும், வாக்குத்தத்தமும் கொடுத்து அவரை ஜெயிக்கப் பண்ணினார்! இப்படி அவர் சூழ்நிலைகளைப்பார்க்காமல் கர்த்தரை மட்டுமே சார்ந்திருந்தால் தான் தாவீதை ஆண்டவர் என் இருதயத்திற்கு ஏற்றவனென்று சாட்சி கொடுத்தார்!

1. எனவே, எதிர்மறையான எண்ணங்கள் நமக்குள் எழும்போது, நம்மை நாமே நிதானப்படுத்திக்கொண்டு, அந்தப் பொய்யான எண்ணத்தை மனதில் எடுத்துக் கொள்ளாமல் அந்த எண்ணத்தை **Ignore** பண்ண முயற்சிக்க வேண்டும். ஏனென்றால், நாம் பெலனில்லாதவர்களாகவோ, ஞானமில்லாதவர்களாகவோ, தகுதியில்லாதவர்களாகவோ இருக்கலாம். ஆனால், நமக்குள் இருக்கும் தேவன் பெரியவர். அவரால் செய்ய முடியாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை. அவர் நமக்குள் இருக்கும்போது நம்மால் எதையும் எப்படியும் செய்ய முடியும்!
**God-Confidence is the Key!**

2. ‘‘நீ இந்தப் பாவத்தைச் செய்தவன்(ள்), நீ ஜெபித்தால் கர்த்தர் கேட்கமாட்டார்’’ இப்படி, பொய்களைக் கூறி பழைய பாவங்களை நமக்கு நினைவுபடுத்தி, அந்தப் பாவத்தில் மீண்டும் நம்மைத் தள்ளி ‘‘இந்தப் பாவத்தை என்னால் மேற்கொள்ளவே முடியாது, நான் ஒரு பாவி’’ என்ற எண்ணத்தைப் பிசாசு புகுத்தி விடுவான். இப்படி எண்ணங்கள் வருகிறதா? பிலிப்பியர் 4ம் அதிகாரம் 8ம் வசனத்தில் கூறியிருக்கிறபடி உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள். பிசாசு கூறும் பொய்களைச் சிந்திக்காமல் ஆண்டவர் நமக்காகக் கூறியுள்ள வாக்குத்தத்தமான உண்மைகளை எப்போதும் சிந்திக்க வேண்டும்.

ஆண்டவர் ஒரு நாளும் நம்மைக் குற்றப்படுத்துகிறவர் அல்ல! குற்றத்தை உணர்த்துகிறவர்! எதிர்மறையான எண்ணங்கள் நமக்குள் எழும்பித் தாக்கும்போது ‘‘தேவனுடைய வார்த்தையால் அதைத் திரும்பத் தாக்க வேண்டும்!’’

உதாரணத்திற்கு, **“என்னால் இதையெல்லாம் செய்யவே முடியாது”** என்று எண்ணும்போது, என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு **(பிலிப்பியர் 4:13)** என்ற வசனத்தால் அந்த எண்ணத்தை மேற்கொள்ளுங்கள்.

**Sticky Notes**-ல் அடிக்கடி உங்கள் மனதுக்குள் எழும்பி உங்களை முன்னேறிச் செல்லவிடாத எண்ணங்களை எழுதுங்கள்.

அதை அடித்துவிட்டு அதற்கு மேலே கர்த்தருடைய வார்த்தை என்னைக் குறித்து என்ன சொல்லுகிறது என்பதை தேடி எழுதுங்கள். இதை நீங்கள் அடிக்கடி பார்க்கிற இடங்களில் கண்ணில் படும்படி ஒட்டி வைத்துக்கொள்ளுங்கள். அதைப் பார்க்கும்போதெல்லாம் நமக்குள் தைரியமும் தெளிவும் ஏற்படும்.

இதைச் செய்து பார்த்து உங்களுக்குள் ஏற்படும் மாற்றத்தை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்!





நிகழ்வு: ஜெனிபர்

# அழுத்தத்தின் கீழ்

*Hi friends,*

**எல்லாரும் எப்படி இருக்கீங்க? அழுத்தத்தின் கீழ் என்னும் இத்தொடரின் மூலம் உங்களை மீண்டும் சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்!**

**கடந்த மாதம், "அழுத்தத்தின் கீழே விளையும் கோதுமை மணியின் அமைப்பைப்" பற்றிப் பார்த்தோம். இந்த மாதம் பிரித்தெடுக்கப்பட்ட பின், "கோதுமை மணியின் நிலை என்ன என்பதைப் பற்றிப் பார்க்கப் போகிறோம்...**

கோதுமை மணி, தண்டிலிருந்து பிரிக்கப்பட்ட பின், 24 மணி நேரம் குறிப்பிட்ட அளவு நீரில் ஊற வைக்கப்படும். அந்த நீரின் அழுத்தத்தால் கோதுமை மணியில் முளைக்கட்ட ஆரம்பிக்கும். பின், நீரிலிருந்து பிரிக்கப்பட்டு, மண்ணில் விதைக்கப்படும். அப்பாடா நம்மை மண்ணில் போட்டு விட்டார்கள். அவ்வளவு தான் நம்ம **free**யா மூச்சு விடலாம் என்று கோதுமை மணி நினைக்கும்போது, அதின் மேல் மண்ணை போட்டு மூடி விடுவார்கள்.



இப்பொழுது ஒரு வழியும் தெரியாத, எங்கும் இருள் நிறைந்த சூழ்நிலை. சார்ந்து நிற்கவோ யாருடைய உதவியும் இல்லை. இந்தக் கோதுமை மணிக்கு முன்பாக இரண்டு **options** இருக்கு. ஒன்று, அது உயிர் வாழ்வதற்கு மண்ணை முட்டித்தள்ளி வெளியே வர வேண்டும். அல்லது, மண்ணுக்குள்ளேயே புதைந்து விட வேண்டும்.

எப்படியாவது போராடி உயிர் வாழ வேண்டும் என்று முடிவெடுத்த அந்தக் கோதுமை மணி, முதலாவது தன் மேல் மூடப்பட்ட மண்ணிலிருந்து தண்ணீரை உறிஞ்சி, தன்னுடைய செயலற்ற நிலையை உடைக்கிறது.

நீரை உறிஞ்ச உறிஞ்ச விதை பெரிதாக வளர்கிறது, அது தன்னுடைய பழைய தன்மையை, பழைய செயலற்ற உருவத்தை இழக்கிறது. புதிய வாழ்க்கைக்கு தன்னை விட்டுக் கொடுக்கிறது.

குறிப்பாய், இவ்வளவு நாள் விதை செயலற்றதாய் இருக்க செய்த பாதுகாப்பு விதை உறை **(Seed Coat)** இப்பொழுது உடைந்து விழுகிறது.

பின் அதிலிருந்து முதன்மை வேரும், இளம் தளிரும் வெளியே வருகிறது.

அந்தத் தளிர் மண்ணோடு போராடி, முட்டிக்கொண்டு வெளியே வருகிறது. அந்த விதையிலிருந்து வெளிப்படும் வேர், இந்தத் தாவரத்தை நங்கூரம் போல ஊன்றி நிற்கச் செய்கிறது.

இப்பொழுது ஒரு சிறு விதையாக இருந்த கோதுமை **Great transformation**க்குள்ளாக சென்று பெரிய கோதுமை பயிராய் உருவெடுக்கிறது.



ஒரு கோதுமை விதை பொதுவாக ஒரு செடியை உற்பத்தி செய்கிறது, இது 3 அல்லது அதற்கு மேற்பட்ட தண்டுகளையும் 30 முதல் 120+ புதிய தானியங்களையும் (விதைகள்) உற்பத்தி செய்கிறது. இப்படித்தான் ஒவ்வொரு கோதுமை விதையும் இறந்து, ஒரு பெரிய அறுவடையை நமக்குக் கொடுக்கிறது.

சாகிறது என்றால் அது தன்னுடைய பழைய உருவத்தை உடைத்து புதிய மாற்றத்திற்குள் செல்வதே ஆகும்.

நாம் ஒரு புதிய மாற்றத்திற்குள் செல்ல வேண்டும் என்பதால் மட்டுமல்ல, நமக்குப் பின்பாக ஏராளமான அறுவடை இருப்பதால்தான் கோதுமை மணி தண்டிலிருந்து பிரிக்கப்படுகிறது போலத் தேவனும் நம்மை அநேகரிடமிருந்து பிரித்து, தனியாகப் பழக்குவிக்கிறார். கோதுமை விதையின் செயலற்ற தன்மையை உடைப்பதற்காக, அது நீர் மற்றும் மண்ணின் அழுத்தத்தின் கீழ் வைக்கப்படுகிறது போல, நம்முடைய செயலற்ற தன்மையை உடைப்பதற்காகவும் நாம் யார், நம்முடைய பலம், பலவீனம் என்னவென்றும், நம்முடைய தேவன் யார் என்றும் உணர வைப்பதற்காகவும் தேவன் நம்மை அழுத்தமான சூழ்நிலைகளுக்குள் அனுமதிக்கிறார். தேவன் அழுத்தமான சூழ்நிலைகளை அனுமதிக்கும்பொழுது, நம்முடைய பழைய குணாதிசயங்கள், நமக்குப் பாதுகாப்பாக இருந்த தன்மைகள் எல்லாம் உடைக்கப்பட்டு, நாம் புதிய உருமாற்றத்திற்குள் வந்துவிடுவோம். வேர் கோதுமை மணியைப் புதிய தாவரமாக வேரூன்றி நிற்கச் செய்கிறதுபோல, பரிசுத்த ஆவியானவரும் நம்மை அழுத்தமான சூழலில் வேரூன்றி நிற்கச் செய்கிறார். தளிர் மண்ணை முட்டி மேலே எழும்புவது போல, நாமும் அந்தச் சூழலை விட்டு மேலே எழும்ப உதவி செய்வார். அப்படி நாம் மேலே வரும்பொழுது நாம் தனியாக அல்ல பல கோதுமை மணிகளைத் தரும் தளிராக நிற்போம்.

ஜெபக் கையேடு – மே 2026




# ஜெபிக்கலாம் வாங்க!

Jebikalam Vanga

ஜெபம் : பெனிட்டா


ஈரான் மீது நடைபெறும் ஏவுகணைத் தாக்குதல்கள் முடிவுக்கு வரவும், உக்ரைன் மீது நடைபெறும் ரஷ்யாவின் போர் தாக்குதல்கள் நிறுத்தப்படவும், அப்பாவி மக்களின் உயிர்சேதங்கள் தடுக்கப்படவும், அவர்கள்மீது தேவனுடைய பாதுகாப்பு உண்டாகவும் ஜெபிப்போம்.





குஜராத் மாநிலத்தின் 20 மாவட்டங்களில் சுமார் 2.05 லட்சம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலைமை மாறவும், குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்த அரசு நல்ல திட்டங்களை அமல்படுத்தவும் ஜெபிப்போம்.

அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் மற்றும் சிகிச்சைக்குத் தேவையான அனைத்து வசதிகளும் எந்தத் தடையுமின்றி கிடைக்கும்படியாக ஜெபிப்போம்.






இந்தியாவில் உள்ள 65 கோடி பெண்கள் கண்ணியமாக நடத்தப்படவும், அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவும், மேலும் பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல் இருக்கும் 37 லட்சம் சிறுமிகள் மீண்டும் கல்வியில் இணைக்கப்படவும் மத்திய மற்றும் மாநில அரசுகளும், சமூக சேவை அமைப்புகளும் சிறந்த நடவடிக்கைகள் எடுக்க ஜெபிப்போம்.



கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மதுக்குடிப்பழக்கத்தினால் பல குடும்பங்கள் சிதைந்துள்ளன. விதவைகளின் எண்ணிக்கையும், தகப்பன் இல்லாமல் வளரும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. தினமும் சுமார் 1½ கோடி மக்கள் மதுவுக்கு அடிமையாகி வருகின்றனர். இந்த அடிமைத்தனத்திலிருந்து மக்கள் விடுதலை பெறவும், இதற்குப் பின்னாக இருந்து செயல்படும் குடியின் ஆவி கட்டப்படவும் ஜெபிப்போம்.

குழந்தைகள் கடத்தப்படுவது, கொலை செய்யப்படுவது போன்ற கொடூர சம்பவங்கள் நிறுத்தப்படவும், குழந்தைகளைத் தவறான செயல்களுக்குப் பயன்படுத்தும் மனிதர்கள் மனந்திரும்பவும், கடத்தப்பட்ட குழந்தைகள் பாதுகாப்பாக மீட்கப்படவும், சிறுவர்களின் உயிரை அழிக்க முயலும் பொல்லாத சக்திகள் கட்டப்படவும் ஜெபிப்போம்.





மருந்துத் தட்டுப்பாடு காரணமாக அரசு மருத்துவமனைகளில்கூட நோயாளிகள் பணம் கொடுத்து மருந்து வாங்கும் நிலைமை மாறி, தேவையான மருந்துகள் தட்டுப்பாடின்றி கிடைக்கும்படியாக ஜெபிப்போம்.

வட இந்தியாவில் பல மிஷனெரிகள் செய்யாத குற்றங்களுக்காகத் துன்புறுத்தப்படுகின்றனர். அவர்களின் பாதுகாப்பிற்காகவும், அவர்கள்மூலம் அநேகர் கிறிஸ்துவை அறியவும் ஜெபிப்போம்.





அதிகரித்து வரும் வெப்பம் மற்றும் வறட்சியால் மக்கள் பாதிக்கப்படாதபடிக்கும், உணவு பற்றாக்குறை நீங்கவும், ஊட்டச்சத்துக் குறைபாடுகள் அகலவும், நோய்கள் தாக்காதபடிக்கு தேவன் தேசத்தைப் பாதுகாக்கவும் ஜெபிப்போம்.

10ஆம் மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதிய அனைத்து மாணவ-மாணவிகளும் நல்ல முடிவுகளைப் பெற்று முன்னேறவும், தோல்வி பயத்தால் யாரும் தவறான முடிவுகள் எடுக்காதபடிக்கும், அவர்கள் விரும்பும் படிப்புத் துறையில் சேர தேவன் வழிநடத்தவும் ஜெபிப்போம்.




# அறிவியலும் வேதாகமும் 2

தகவல்: ஜெனிபர்

Hi friends, அறிவியலும் வேதாகமமும் என்ற தொடரின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

Friends, நீங்கச் சுவரில் பந்தை அடிச்சு விளையாடி இருக்கீங்களா? நாம் சுவரை நோக்கிப் பந்தை அடிக்கும்போது என்ன நடக்கும்? நாம் எந்தளவு forceஆ சுவரை நோக்கிப் பந்தை அடிக்கிறோமோ அந்தளவு forceஆ பந்து நம்மை நோக்கித் திருப்பி அனுப்பிடும் அப்படித்தானே.

ஏன் இப்படி நடக்கிறது? ஏன் அந்தப் பந்து சுவரில் பட்டுக் கீழே விழாமல் மீண்டும் நம்மை நோக்கி வருகிறது? இதற்குப் பின் இருக்கும் அறிவியல் பின்னணி தான் என்ன?தெரிந்து கொள்ள ஆசையா இருக்கீங்களா friends




## நியூட்டனின் மூன்றாம் இயக்க விதி

நியூட்டனின் மூன்றாம் இயக்க விதியின்படி (Newton's third law of motion) இயற்கையில் ஒவ்வொரு செயலுக்கும் (விசை) சமமான மற்றும் எதிர்வினை உண்டு என்று கூறுகிறது. ஒரு பொருள்(நாம்), இரண்டாவது பொருளின் (சுவரின்) மீது ஒரு செயலை (force) செலுத்தும் போதெல்லாம், அதே நேரத்தில் அந்த இரண்டாவது பொருள் (சுவர்), அந்த முதல் பொருள்மீது (நம் மீது) சமமான அளவுச் செயலை/விசையை (force) செலுத்தும்.

இதுல **beautiful** ஆன விஷயம் என்னண்ணா, நாம சுவரின் மீது பந்தை அடிப்பது பெயர் Action. அந்தச் சுவர் பந்தைத் நம்மை நோக்கிப்

திருப்பி அடிப்பது **Reaction.**

அப்படின்னா நாம எந்த அளவுக்கு **Action**ல ஈடுபடுறோமோ, அந்த அளவுக்கு **Reaction**அ நாம **opposite side**ல இருந்து எதிர்பார்க்க முடியும்.

**Friends,** நியூட்டனின் மூன்றாம் இழக்க விதி மட்டும் இதைச் சொல்லல. நம்ம வேதத்தின் விதியும் **(law)** இதைத் தான், மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் (கலா.6:7) என்று வேத வசனம் நமக்குச் சொல்கிறது. நாம் எந்த அளவு (தேவனுடைய அன்பில்) பிறருக்கு நன்மை செய்கிறோமோ அந்த அளவு தேவனிடம் நன்மையைப் பெற்றுக் கொள்வோம்.




ஆமா **friends,** நாம் எந்த அளவுக்கு நன்மையான காரியங்களைப் பிறருக்கு செய்றோமோ, அந்த அளவுக்கு நன்மைகளை நாம் தேவனிடத்திலிருந்து பெற்று கொள்வோம். எந்த அளவுக்குத் தீமையான காரியங்களைச் செய்றோமோ, அந்த அளவுக்குத் தீமைகளை நம் வாழ்வில் சந்திக்க நேரிடும். அதுமட்டுமல்ல **friends** எந்த அளவுக்கு நாம் தேவனோடு நேரத்தைச் செலவிடுறோமோ, அந்த அளவுக்குத் தேவனால் நம்மைப் பயன்படுத்த முடியும். எந்த அளவுக்கு நாம் உலகத்தில் நேரத்தைச் செலவிடுறோமோ, அந்த அளவுக்கு நாம் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, பின்வாங்கி உலக காரியங்களில் மூழ்கித் தேவன் நம் மீது வைத்திருக்கிற திட்டத்தையும் அழைப்பையும் இழந்துக் கெட்ட குமாரனைப் போலப் பரிதாபமான நிலையை அடைந்து விடுவோம்.

**மறந்திடாதீங்க friends, நாம எந்த அளவுக்கு Actionல ஈடுபடுறோமோ, அந்த அளவுக்கு தேவனும் Reactionல இறங்குவார்.**

**So, friends Be Careful. எதை செய்தாலும் ஜாக்கிரதையா செய்யுங்க. நாம் செய்யும் எல்லா கிரியைகளுக்குமான பலன் தேவன் வரும்பொழுது அவரோட கூட வருகிறது என்று வேதம் சொல்கிறது (வெளி. 22:12).**

அதனால ஞாபகம் வச்சுக்கோங்க... **every action has an equal and opposite reaction.**



(ஆய்வுகள் தொடரும்)




## EVERY 1st SUNDAY (3rd MAY)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre, Ajantha Mahal, # 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #62, 2nd Floor, Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9750955548 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre, Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2nd SUNDAY (10th MAY)

**BANGALORE (3PM-5PM)**
World Revival Prayer Centre, 57/2 Thomasappa layout (Opp) Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya (Nagavara)
9791444788 | 080 35 45 45

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

**MULUND (5PM - 7:30PM)**
Shekinah NLA Church, Vijay Nagar, Near Vani Vidyalaya School, Mulund-West
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School (Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street, North side of TPV Mill, Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, #203, Madurai Road, Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM)**
Reheboth Church,
Near old bus stand,
9710809626 | 9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar, 1st street,
Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto, 1st floor,
163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 3rd SATURDAY (16th MAY)

**MYSORE (3:30PM - 6PM)**
World Revival Prayer Center,
3818, 14th Cross, St. Mary's Road,
FTS Circle, N.R. Mohalla.
9962085523 | 9886311777

## EVERY 3rd SUNDAY (17th MAY)

**SALEM (3PM - 6PM)**
Karunya Prayer Hall,
76/67, Near Thinathanthi office,
opp. Gandhi Stadium, Arisipalayam
9962085523

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**TIRUPORUR (3 PM - 6 PM)**
Come compassion Centre,
Mettuthandalam, Tiruporur.
9710809626

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing,
Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9750955548

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road,
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9750955548

**PONDICHERRY (5PM TO 7PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9962085523

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

**DELHI (3 PM TO 5 PM)**
World Revival Prayer Centre,
Plot 152, Pratap Nagar
Near Hari Nagar bus depot
New Delhi - 110064
7217663240

## EVERY 4th SUNDAY (24th MAY)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar, Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor,
305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**THISAYANVILAI (2:30PM - 5:30PM)**
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845 | 9750955548

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur
Byepass Road, Madurai
9750955548

**உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**

# வேதாகம களஞ்சியம்

வேத ஆராய்ச்சி : ஜோயல்

ஹலோ Friends! ஒவ்வொரு மாதமும் இப்பகுதியின் மூலம் வேத பின்னணிகளை அறிந்து வேதாகமத்தை படிப்பது உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கிறதென்று நம்புகிறோம். இந்த மாதம் 1 சாமுவேல், 2 சாமுவேல் புத்தகங்களின் பின்னணியை அறிந்துக்கொள்வோம்!

1 சாமுவேல்: சாமுவேலின் தலைமைத்துவம், சவுலின் எழுச்சியும் வீழ்ச்சியும், தாவீது ராஜாவாகத் தயாராகும் ஆரம்பகால வாழ்க்கை ஆகியவற்றை உள்ளடக்கியது.

2 சாமுவேல்: தாவீதின் ஆட்சி — அவருடைய வெற்றிகள், எருசலேமின் ஸ்தாபனம், தேவனுடனான உடன்படிக்கை, மற்றும் அவருடைய தனிப்பட்ட தோல்விகளின் விளைவுகள்.


## வரலாற்றுப் பின்னணி:

இந்தக் காலகட்டத்திற்கு முன்பு, இஸ்ரவேல் நெருக்கடியான காலங்களில் தேவனால் நியமிக்கப்பட்ட தற்காலிகத் தலைவர்களான நியாயாதிபதிகளால் வழிநடத்தப்பட்டது. இருப்பினும், வெளிப்புற அச்சுறுத்தல்கள் - குறிப்பாகப் பெலிஸ்தியர்களிடமிருந்து, அதிகரித்தபோது, இஸ்ரவேலர்கள் "மற்ற தேசங்களைப் போன்ற" தங்களுக்கென்று ஒரு இராஜாவை ஏற்படுத்தும்படி சாமுவேல் தீர்க்கதரிசியினிடம் முறையிட்டார்கள். இது ஒரு பக்கம், தங்களுக்கென்று ஒரு நிலையான அடையாளத்தை எண்ணி கேட்டிருந்தாலும், மறுபக்கம் தேவனின் நேரடி ஆட்சியின் மீதான அவர்களின் நம்பிக்கையின்மையை பிரதிபலிக்கிறது.


## முக்கிய நபர்கள்:



சாமுவேல் — கடைசி நியாயாதிபதி மற்றும் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு தீர்க்கதரிசி. அவர் ஒரு ஆவிக்குரிய தலைவராகப் பணியாற்றி, இஸ்ரவேலை வழிநடத்தி, அதன் முதல் இரண்டு ராஜாக்களை அபிஷேகம் பண்ணினார்.



சவுல் — இஸ்ரவேலின் முதல் ராஜா. அவருடைய வெளித்தோற்ற குணங்களுக்காகவும் ஆரம்பகாலத் தாழ்மைக்காகவும் தெரிந்தெடுக்கப்பட்டார். இருப்பினும், தேவனுக்கு கீழ்ப்படியாததால் அவர் தேவனால் நிராகரிக்கப்பட்டார்.



தாவீது — சவுலுக்குப் பதிலாகத் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டு சிறுவயதிலேயே அபிஷேகம்பண்ணப்பட்ட ஒரு மேய்ப்பன். தேவபக்த் மிகுந்த வாலிபனாக அறியப்பட்ட தாவீது, தனிப்பட்ட தோல்விகள், ஆவிக்குரிய வீழ்ச்சிகள் இருந்தபோதிலும் இஸ்ரவேலின் மாபெரும் ராஜாவாகத் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவராகத் திகழ்ந்தவர்!

## கருப்பொருள்:

### 1. தலைமைத்துவத்தின் மீது தேவனின் ஆளுகை

இஸ்ரவேல் ஒரு ராஜாவை விரும்பியபோதிலும், தேசம் ராஜாதி ராஜாவாகிய தேவனுடைய கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. தேவன் தமது நோக்கத்திற்கேற்ப தலைவர்களைத் தெரிந்தெடுக்கிறார். இதன்மூலம், உண்மையான அதிகாரம் அவருக்குக் கீழ்ப்படிவதினாலேயே வருகிறது என்பதை வெளிப்படுத்தினார்.

### 2. வெளித்தோற்றத்தை விடக் கீழ்ப்படிதலே மேலானது:

வெளிப்புற வெற்றியும் திறமையும் உண்மையான கீழ்ப்படிதலுக்கு மாற்றாக அமையாது என்பதை சவுலின் வாழ்க்கை விளக்குகிறது. இதற்கு மாறாக, தாவீது துணிகரமான தவறுகளைச் செய்யும்போதும், தேவனுக்காக அவர் கொண்டிருந்த அன்பும் பக்தியும் அவரைத் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவராகக் காணப்பண்ணினது.

### 3. தாவீதிய உடன்படிக்கை: (Davidic Covenant)

2 சாமுவேல் புத்தகத்தின் ஒரு முக்கிய சிறப்பம்சம், தாவீதுடன் தேவன் செய்த உடன்படிக்கையாகும் (2 சாமுவேல் 7). அதில், தாவீதின் சிங்காசனம் என்றென்றும் நிலைத்திருக்கும் என்று தேவன் வாக்குத்தத்தம் அளிக்கிறார். இந்த உடன்படிக்கை, வரப்போகும் மேசியாவைப் பற்றிய எதிர்கால நம்பிக்கைக்கு அடித்தளமாக அமைகிறது.



## 4. பாவத்தின் விளைவுகளும் மற்றும் கிருபையின் விளைவுகளும்:

சவுலும் தாவீதும் பாவம் செய்கிறார்கள், ஆனால் அவர்களுடைய மறுமொழிகள் வேறுபடுகின்றன. சவுல் தன் இருதயத்தைக் கடினப்படுத்திக் கொள்கிறார், தாவீதோ மனந்திரும்புகிறார். இந்த நிகழ்வுகள், தம்மிடத்தில் திரும்புகிறவர்கள் மீது தேவன் காட்டும் நீதியையும் அவருடைய இரக்கத்தையும் வெளிப்படுத்துகின்றது.

### நினைவிற்கு:

மனிதத் தலைமை குறைபாடுடையதாக இருந்தாலும், தேவதிட்டம் பரிபூரணமானது என்று இந்தப் புத்தகங்கள் போதிக்கின்றன. தாவீதுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தமானது, முடிவில் நித்திய ராஜாவான இயேசு கிறிஸ்துவையே சுட்டிக்காட்டுகிறது; அவருடைய ராஜ்யம் ஒருபோதும் முடிவடையாது.


# UPSC பயிற்சி வகுப்பு (2026-2027)

இயேசு விடுவிக்கிறார் மற்றும் புதுவாழ்வு சங்கம் இணைந்து நடத்தும்

## DANIEL CIVIL SERVICE COACHING PROGRAM

- ஒரு ஆண்டு முழுமையான பயிற்சி: மே 2026 முதல் மார்ச் 2027 வரை
- பள்ளி (8ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு)
- மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான (2026-2027)
- IAS, IPS தேர்வுக்கான சிறப்பு பயிற்சி.
- வாரத்தில் 3 நாட்கள் (புதன், சனி & ஞாயிறு) ஆன்லைன் வகுப்புகள் நடைபெறும்.
- மிகக் குறைந்த கட்டணத்தில் தரமான பயிற்சி வழங்கப்படும்.




தொடர்புக்கு :
9488475315
8778443617

# செய்திகள்!

## எந்த நாட்டையும் சார்ந்திருக்க விரும்பாமல்,

# அங்கோலாவிடம் கச்சா எண்ணெய் வாங்கும் இந்தியா!




எரிபொருள் தேவைக்கு எந்த ஒரு தனி நாட்டையும் சார்ந்திருக்க விரும்பாத இந்தியா, பல நாடுகளிலிருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்கிறது. தற்போது ஆப்பிரிக்க நாடான அங்கோலாவிலிருந்து கச்சா எண்ணெய் மற்றும் சமையல் எரிவாயுவை அதிகம் கொள்முதல் செய்கிறது.

ரஷ்யா - உக்ரைன் போர் கடந்த 2022-ம் ஆண்டு தொடங்கியதிலிருந்து ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் விதித்தன. ஆனால், ரஷ்யாவின் நட்பு நாடுகளான இந்தியா மற்றும் சீனா ஆகியவை ரஷ்யாவிடமிருந்து அதிகளவில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்தன. இந்தியாவுக்கு மலிவு விலையில் கச்சா எண்ணெயை ரஷ்யா வழங்கி வந்தது.

ஆனால், இதற்காக இந்தியாவுக்கான இறக்குமதி வரியை அமெரிக்கா உயர்த்தி நெருக்கடி கொடுத்தது. இதனால் ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா குறைத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாயின.

தற்போது ஈரான் போர் காரணமாகக் கச்சா எண்ணெய் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், ரஷ்யாவிடம் தற்காலிகமாகக் கச்சா எண்ணெய் வாங்க அமெரிக்கா ஒரு மாதம் அனுமதி அளித்தது.

இந்தியா தனது எரிபொருள் தேவைக்கு இப்போது ஒரு குறிப்பிட்ட நாட்டைச் சார்ந்திருப்பதில்லை. வளைகுடா நாடுகள் உட்பட பல நாடுகளிலிருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்து வருகிறது. தற்போது ஆப்பிரிக்க நாடான அங்கோலாவிலிருந்து கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு வாங்குவதை இந்தியா அதிகரித்துள்ளது.

அங்கோலாவிலிருந்து சமீபத்தில் இந்தியா 2 மில்லியன் பேரல் கச்சா எண்ணெய் வாங்கியது. தற்போது மேலும் 1 மில்லியன் பேரல் கச்சா எண்ணெய் வாங்க இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் ஒப்பந்தம் செய்துள்ளது. இங்கிருந்து ஹங்கோ மற்றும் க்ளோவ் ரக கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது. இது ஆசிய சுத்திகரிப்பு நிலையங்களுக்கு உகந்த ரகமாகும். இதிலிருந்து பெட்ரோல் மற்றும் டீசல் அதிகளவில் பெற முடியும்.

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய், காஸ் ஆகியவற்றுக்கு நெருக்கடி ஏற்பட்டாலும், இந்தியாவில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படாத வகையிலும், விலை ஏற்றத்தைத் தடுக்கும் வகையிலும் மத்திய அரசு பல்வேறு நாடுகளிலிருந்து அவசரமாகக் கொள்முதல் செய்து வருகிறது.

- இந்து தமிழ் திசை ஏப்ரல், 5

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# வாலிபர் எழுப்புதல் கூடுகை







கடந்த மார்ச் மாதம் 31ஆம் தேதி கர்நாடகா மாநிலம் பெங்களூரில் வாலிபர்களுக்கென்று வாலிபர் எழுப்புதல் கூடுகை நடத்த தேவன் கிருபை செய்தார். கர்நாடக மாநிலத்தின் எழுப்புதலுக்காக வாலிபர்களை ஆயத்தப்படுத்த, சகோ. மோகன் சி. லாசரஸ் மற்றும் சகோ. வின்சென்ட் செல்வகுமார் அவர்களைத் தேவன் வல்லமையாகப் பயன்படுத்தினார்.

பதிவு செய்த வாலிபர்களில் 1019 பேரை தேவன் வரவழைத்து, யோசுவாவைப் போலச் சுதந்தரிக்கிறவர்களாக மாற என்ன செய்ய வேண்டும் என்று 6 காரியங்களைச் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் பேசி வாலிபர்களை ஊழியம் செய்ய அர்ப்பணிக்க வைத்தபோது 78 பேரைத் தேவன் தெரிந்தெடுத்தார். தேவனுக்கே மகிமை..!









Registered under the press and
Registration of Periodicals Act, 2023: TNBIL/2010/32847

